பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண் : 27

நாள்: 03.02.2019

**பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட வியாபார சந்தை பகுதிகளில் மாநகராட்சி அலுவலர்களால் இன்று மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வில் 4.35 மெட்ரிக் டன் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.**

தமிழகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் விதி எண் 110ன் கீழ் 01.01.2019 அன்று முதல்** தமிழ்நாடு முழுவதும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்படுவதாக அறிவித்திருந்தார்கள்.

இதனை தொடர்ந்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்களின் ஆலோசனையின்படியும், ஆணையாளர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படியும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தொடர் சோதனைகளில் 01.01.2019 முதல் 02.02.2019 வரை 90.20 மெட்ரிக் டன் அளவிலான தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

மேலும், இன்று (03.02.2019) பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் கோயம்பேடு காய்கனி அங்காடி வளாகம், காசிமேடு மற்றும் சிந்தாதரிபேட்டை மீன் அங்காடி வளாகம், திருவான்மியூர் சந்தை உட்பட 2898 அங்காடிகளில் மேற்கொள்ளப்பட்ட திடீர் ஆய்வில் 4.35 மெட்ரிக் டன் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இவற்றில் குறிப்பாக கோடம்பாக்கம் மண்டலம் கோயம்பேடு மார்கெட் வளாகத்தில் துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு. மதுசுதன் ரெட்டி இ.ஆ.ப., அவர்கள் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்காடிகளில், பயன்பாட்டில் இருந்த 1.5 மெட்ரிக் டன் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்து வியாபாரிகளிடம் தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை தவிர்க்கும் வகையில் விழிப்புணர்வு பிரசுரங்களை வழங்கினார்கள்.

தண்டையார்பேட்டை மண்டலம் காசிமேடு மீன் அங்காடி மற்றும் இராயபுரம் மண்டலம் சிந்தாதரிப்பேட்டை மீன் அங்காடி வளாகத்தில் வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி திவ்யதர்ஷினி இ.ஆ.ப., அவர்கள் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்காடிகளில், பயன்பாட்டில் இருந்த 485 கிலோ கிராம் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்து வியாபாரிகளிடம் பிளாஸ்டிக் பொருட்களுக்கான மாற்று பொருட்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

அடையாறு மண்டலம் எல்.பி சாலையில் உள்ள தனியார் வியாபார நிறுவனங்கள் மற்றும் திருவான்மியூர் மார்கெட் வளாகத்தில், தெற்கு வட்டார துணை ஆணையாளர். திரு.எஸ்.கோபால சுந்தரராஜ் இ.ஆ.ப.,அவர்கள் இன்று திடீர் ஆய்வு மேற்கொண்டு அங்காடிகளில், பயன்பாட்டில் இருந்த 1.07 மெட்ரிக் டன் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களை பறிமுதல் செய்து வியாபாரிகளிடம் பிளாஸ்டிக் பொருட்களுக்கான மாற்று பொருட்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினார்கள்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட 15 மண்டலங்களில் 01.01.2019 முதல் 03.02.2019 வரை மொத்தம் 94.55 மெட்ரிக் டன் தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஆய்வின் போது மத்திய வட்டார துணை ஆணையாளர் டாக்டர் சுபோத்குமார் இ.ஆ.ப., அவர்கள் மாநகர நல அலுவலர் டாக்டர் செந்தில் நாதன், மண்டல அலுவலர்கள் திரு.மங்களராமசுப்ரமணியன், திரு.வீரபத்திரன், திரு.எஸ்.நடராஜன், திரு.ஆர்.நேருகுமார், கூடுதல் மாநகர நல அலுவலர் (வடக்கு) டாக்டர்.ராஜ்குமார், கூடுதல் மாநகர நல அலுவலர் (தெற்கு) டாக்டர் மகாலட்சுமி, செயற்பொறியாளர்கள், உதவி செயற்பொறியாளர்கள், சுகாதார அலுவலர்கள் மற்றும் மாநகராட்சி பணியாளர்கள் உடன் இருந்தனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
பெருநகர சென்னை மாநகராட்சி

Scanned by CamScanner

**பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்களால் இன்று (03.02.2019) பறிமுதல் செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்களின் விவரம்**

| மண்டலம் | ஆய்வு செய்யப்பட்ட கடைகளின் எண்ணிக்கை | பறிமுதல் செய்யப்பட்ட தடைசெய்யப்பட்ட பிளாஸ்டிக் பொருட்கள் கி.கி |
|---|---|---|
| 1 | 75 | 52 |
| 2 | 70 | 25 |
| 3 | 181 | 23 |
| 4 | 190 | 400 |
| 5 | 200 | 85 |
| 6 | 305 | 31 |
| 7 | 236 | 215.5 |
| 8 | 250 | 115 |
| 9 | 281 | 118 |
| 10 | 192 | 1593 |
| 11 | 91 | 108 |
| 12 | 222 | 290 |
| 13 | 369 | 1070 |
| 14 | 154 | 122 |
| 15 | 82 | 105 |
| | 2898 | 4352.5 |

Scanned by CamScanner